R4823

# "SUFFER LITTLE CHILDREN TO COME"
# "சிறுபிள்ளைகள் வருகிறதற்கு இடங்கொடுங்கள்"

பெற்றோர்கள் அநேக சந்தர்ப்பங்களில் அவர்களது குழந்தைகளைப் பற்றியும் தங்களது பிள்ளைகளை எப்படி கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணுவது என்பது குறித்துக் கர்த்தரிடம் கேட்டார்கள். நாம் குழந்தைகளை ஞானஸ்நானம் கொடுப்பதற்கு நிச்சயமாக மறுக்கிறோம். ஏனெனில் அப்படிப்பட்ட காரியம் தேவனுடைய வசனங்களுக்கு விரோதமாக இருக்கிறது. ஏனெனில் ஞானஸ்நானம் விசுவாசிகளுக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டும். அது மரணபரியந்தம் தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணத்தின் ஒரு வெளியரங்கமான அடையாளமாக இருக்கிறது. விசுவாசத்தினால் இப்படி அர்ப்பணம் செய்வதால், கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் சாயலில் பங்கு பெறுவார்கள்.

எனினும் சாமுயேல் குழந்தை பருவத்திலேயே எப்படி கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டார் என்பதையும், நமது பெற்றோர்கள் எப்படி நம்மை குழந்தை பருவத்திலேயே கர்த்தருடைய ஊழியத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டோம் என்பதையும், அனைத்து யூத சிறுவர்கள் கர்த்தருடைய சித்தத்தின்படி எப்படி பரிசுத்தத்திற்காக பிரித்து வைக்கப்பட்டார்கள் என்பதையும் நாம் நினைவு கூருகிறோம். மேலும் எப்படி பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஆசீர்வதிக்கும்படியும் அல்லது ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கும்படியும் இயேசுவிடம் கொண்டு வந்தார்கள் என்பதையும் நினைவுகூருகிறோம். சீஷர்கள், இது ஆண்டவருக்கு முக்கியமில்லாத வேலை என்று நினைத்து அதைத் தடுத்தார்கள் என்பதையும் நாம் நினைவுகூருகிறோம். அப்பொழுது இயேசு அவர்களை அழைத்துக் கூறியதாவது: "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களை தடை பண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது." (மாற்கு 10:14) இனி புரூக்ளினில் ஞாயிறு மாலை குழந்தைகளை ஆசீர்வதிக்கும் ஆராதனை நடைபெறும் என்று அறிவிப்பு கொடுத்தோம். ஆனால் எந்த வகுப்பும் நாங்கள் வரும் போது பொது கூட்டத்தில் இந்த சந்தர்ப்பத்தை ஏன் பயன்படுத்தவில்லை என்பதற்கு காரணம் என்ன என்று தெரியவில்லை.

இந்த ஆராதனை பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது எங்களது கருத்து, பெற்றோர்களின் பொறுப்புக்களை இது பதிய வைக்கக்கூடியதாக இருக்கிறது. பொது இடத்தில் பிள்ளைகளை தேவனுக்கு அர்ப்பணிப்பது, பெற்றோர்கள் தங்கள் கடமைகளை செய்வதற்கும் பிள்ளைகள் தாங்கள் தேவனுக்கு அர்ப்பணம் பண்ணப்பட்டிருக்கிறோம் என்கிற அறிவுக்கு வரவும் உதவுகிறது.

எனினும் இதில் பிரமாணம் அல்லது கடமை அல்லது முறைமை இருக்கிறது என்று புரிந்துகொள்ளக்கூடாது. அதை விரும்புகிறவர்களுக்காக மட்டும் இது ஏற்பாடு செய்யப்படுகிறது. இது ஒரு நபரால் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்பதில்லை. சத்திய ஊழியம் செய்கிற யாரும் பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க பகிரங்கமாக காரியத்தைக் கூறி தெய்வீக ஆசீர்வாதத்தை கேட்கலாம்.